



ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அலுவலகத்தை ஈரோடு சோலார் ரவுண்டானா பகுதியில் கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து இந்தப் புதிய அலுவலகத்தில் இருந்து ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி மக்களுக்காக தொண்டாற்றவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் பணி சிறக்கட்டும் என்று வாழ்த்தினார். அதுபோது அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மருத்துவர் மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ் மற்றும் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், சட்டமன்ற உறுப்பினர், கழக முன்னணியினர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குடி கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (02.08.2024) மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.ஆர்.ரம்யாதேவி, முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் – நெடுங்குடி கிராமத்தில்

# 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்!

புதுக்கோட்டை, ஆக.4-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குடி கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி 02.08.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்று சேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல் கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்கள். இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றியம், நெடுங்குடி கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நேரில் பார்வையிடப்பட்டது.

இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் இம்முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஆர்.ரம்யாதேவி, முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணராஜா, வி.ஆர். இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### ப.கோவிந்தராசன் முன்னிலை! கே.பழனியப்பன் தலைமை!

# கீழ்வேளூர் தெற்கு ஒன்றியத்தில் கலைஞர் சிலை!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் திறந்து வைத்தார்!

நாகை. ஆக. 4-

நாகை மாவட்டம் கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் ஆந்தகுடியில் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் நினைவு கொடி கம்பத்தில் கொடி ஏற்று விழா மற்றும் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின்சிலை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பழனியப்பன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளருமான ப. கோவிந்தராஜன் முன்னிலை வகித்தார். ஆந்தகுடி கிளை செயலாளர் கா.அண்ணாதுரை வரவேற்றார்.

நிகழ்ச்சியில் ஆந்தகுடியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலையை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, ஆந்தகுடி ஊராட்சி மன்ற தலைவர் எஸ் பாலகிருஷ்ணன் நினைவு கொடிக்கம்பத்தில் கழக கொடியை ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய குழு துணை தலைவர் எஸ்.புருஷோத்தமதாஸ், முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் பஞ்சு. நாகராஜன், மாவட்ட விவசாய தொழிலாளரணி துணை அமைப்பாளர் கே. செந்தில்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜீவானந்தம், மாவட்ட பிரதிநிதிகள் பி. கிரிதரன், ஆர்.நடராஜன் , சி.வீரமணி, ஆர். கே.கண்ணன், ஒன்றிய துணை செயலாளர்கள் எஸ்.சிவக்குமார், கே.மதியழகன், உமாபாலமுரளி ஒன்றிய பொருளாளர் கே.கணேசன், ஒன்றிய சிறுபான்மை அணி அமைப்பாளர் நத்தர்ஷா, ஊராட்சி மன்ற தலைவர் சுகுணா அறிவழகன், துணைத் தலைவர் மகாராணி,

முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகானந்தம், மற்றும் கூரத்தாங்குடி தண்டபாணி, வெண்மணி ஊராட்சி மன்ற தலைவர் மாதவன், கிளைக் கழக செயலாளர்கள் ஏ.உலகநாதன் ஈ. பாஸ்கர் எல். ராஜேந்திரன், ஆந்தகுடி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ரமேஷ், சுரேஷ், கோமதி, அமிர்நாத், கலைவாணி . கிளை கழக நிர்வாகிகள் கே. பூமிநாதன், டி.கார்த்தி, கே.குமார், ஆர். ராஜாராமன், எம். தங்கராசு, எஸ்.சுப்பிரமணியன், எம். ராஜப்பன், ஜி.மதியழகன், ஜே. பாபு, எஸ்.சேகர், எம். ரமேஷ், சி.இந்திரா । ஆர். சசிகலா, வி.தியாகராஜன், டி. இந்திராணி, பி.தவகுரு, யு.கஸ்தூரி, ஆர்.அறிவழகன், ஜி.காளிதாஸ், எஸ்.லதா, டி.ஜெய்சங்கர், எஸ். செந்தில்குமார், ஏ.மோகன், டி.ரமேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் எஸ்.சூரியன் ஆர்.கோட்டைசாமி ஆகியோர் நன்றி கூறினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் - கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி. வெ.கணேசன் அறிக்கை!

கடலூர் ஆக.4 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை கீழ் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் 07.08.2024 அன்று புதன்கிழமை காலை கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள , வார்டு, மற்றும் கிளைகள் தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும், நினைவு அஞ்சலி செலுத்தியும், அமைதி ஊர்வலம் நடத்தியும் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும். இந்நிகழ்ச்சிகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள , ஒன்றிய கழக , நகர கழக , பேரூர் கழக, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்டக் கழக நிர்வாகிகள்.

முன்னாள், இந்நாள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமரி மணிமாறன்
### ஆகஸ்ட் 4 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளைப் போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தி.மு.க. தொண்டர் அணி

## மாவட்ட அமைப்பாளர் -துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தொண்டர் அணிச் செயலாளர் பெ. சேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சேலம் கிழக்கு மாவட்டம்**

**தலைவர் :** சி.பாண்டியன்,110, கலைஞர் காலனி, நரசிங்கபுரம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

**துணை தலைவர்:** ர. ஆனந்தகுமார், கொட்டவாடி, பெத்த நாயக்கன் பாளையம், சேலம் மாவட்டம்.

**அமைப்பாளர்:** செ.பழனிவேல் (எ) அப்பு, 6/154, பெருமாள் கோவில் தெரு, அனுப்பூர், வாழப்பாடி, சேலம் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள் :** கூ. கருப்பையா, 3/257, காமராஜ்நகர், நாவலூர், தலைவாசல், சேலம்மாவட்டம். ச. முத்துசாமி, 56/45, காளியம்மன் நகர், காட்டுவளவு, அயோத்தியாபட்டணம், சேலம் மாவட்டம். ம. ஸ்ரீபதி, 148, அருந்ததியர் தெரு, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம். க.காமராஜ், காரிப்பட்டி, அயோத்தியாப்பட்டணம், சேலம் மாவட்டம். ந.தேவன், 92/13, ஆத்துப்பாலம், அயோத்தியாப்பட்டணம், சேலம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்- 01.08.2024

**மாஸ்டர் பெ. சேகர்,**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி வி. முத்து
### ஆகஸ்ட் 4 (2016)



சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

ஒன்றுபட்ட சேலம் மாவட்டப் பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**